## பத்திரிக்கை செய்தி

சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டுக்கொண்டுவரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்திற்கு ரூ.14000/-தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக ஒரு சமூகப்பணியாளர் பதவி நிரப்பப்பட உள்ளதால் தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பம் வரவேற்கப்படுகின்றன.

தொகுப்பூதியம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பவுள்ள காலிப்பணியிட விவரம்

சமூகப்பணியாளர் - 1 பணியிடம்.

தொகுப்பூதியம்-ரூ.14,000/- மாதம் ஒன்றிற்க்கு

**கல்வித்தகுதி, அனுபவம் மற்றும் வயது.**

பட்டதாரி/முதுநிலை பட்டதாரி (10+2+3 மாதிரி)

உளவியல்/சமூகப்பணி/சமூகவியல்களில்/வழிக்காட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குழந்தைகள் சார்ந்த பணியில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

வயது வரம்பு 01.07.2019 அன்றுள்ளபடி 40 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட பதவிக்கு தகுதியுடைய நபர்கள் வேலூர் மாவட்ட இணையதளத்தில் **https://vellore.nic.in** விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து வரும் 15/11/2019 மாலை 05.30 மணிக்குள் கீழ்கண்ட முகவரியில் வந்து சேரும் வகையில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாக அனுப்பப்படவேண்டும். மேற்குறிப்பிட தேதிக்குப்பின் வரும் விண்ணப்பங்கள் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்தகவலின்றி நிராகரிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி.

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
அண்ணாசாலை, சுற்றுலா மாளிகை எதிரில்.
வேலூர்-632001.வேலூர் மாவட்டம்.

ஒம்/-
மாவட்ட ஆட்சியர்
வேலூர்-12.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

30/10/19
District Child Protection Officer
District Child Protection Unit,
Anna Salai, (Opp. Circuit House),
VELLORE - 632 001.